3. அரசினர் தீர்மானம்.

நிகழ்ச்சி நிரலில் மாற்றம் குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன :—

இன்றைய நிகழ்ச்சி நிரலில் அரசினர் சட்ட முன்வடிவுகள் என்ற தலைப்பின் கீழ் இனம் 2–ல் வருகின்ற (1) 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு,(2)1980ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயவாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, (3) 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, (4) 1980 ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவு, (5) 1980 ஆம் ஆண்டு கூடுதல் நன்செய் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி தனி நன்செய் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்ட முன்வடிவு ஆகியவைகள் ஆளுநர் பேருரைககு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதமும் பதிலுரையும் என்று வருகின்ற இனம் 1–க்கு முன்னால் எடுத்துகொள்ளப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

[முற்பகல் 9.10]

திரு அ. ரகுமான்கான் : தலைவர்களே. பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படியே பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று அனுமதித்துக்கொண்டிருந்தால் அவையீன் நேரம் வீணாகிறது. அமருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குச் சாந்தம் உண்டாக்குவது உறுப்பினர்களுடைய கடமை, ஆகவே உறுப்பினர்கள் தான் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : * * * *

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

980 பிப்ரவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைக்கு அவையில் ஒரு தீர்மானம் மொழிந்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே கேள்வி நேரம் இல்லை என்றால் மற்ற அலுவல்களும் தானாக நின்றுவிடுகிறது. ஆகவே எது எது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்பதைக் கவனித்து ஆவன செய்கிற நிலையிலேதான் நான் இருக்கிறேன். ஆகவே இவ்வாறு ஒவ்வொருவருக்கும் பேச வாய்ப்புத் தர வேண்டும் என்றால் அது இயலாது இன்றைக்குக் கேள்வி நேரம் வேண்டாம் என்று சொன்னதற்குக் காரணம் நிறைய அலுவல்கள் முடிக்க வேண்டி இருப்பதுதான். ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் நீங்கள் குறிப்பிடுகின்ற பிரச்சினை பற்றி ஒரு அறிக்கை வைப்பார்களே தவிர மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து பேசுவது என்றால் அதை என்னால் அனுமதிக்க முடியாது. அதற்கெல்லாம் நேரமில்லை.

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொருவரையும் இப்படிப் பேச அனுமதித்து நான் நேரத்தை வீணாக்க விரும்ப வில்லை. ஆகவே அந்தப் பிரச்சனைக்கு அமைச்சரவர்கள் விளக்கம் சொல்வார்கள். தாங்கள் அமருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு மேலும் பேசி பல பிரச்சினைகளை உருவாக்க வேண்டாம். அமருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையினுடைய நேரத்தைக் காப்பது என்னுடைய பிரச்சனை. ஆககே தாங்கள் பேசுவதை அனுமதிக்க இயலாது. உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அவர்கள் தயவு செய்து அமருங்கள். நேரம் வீணாகிறது.

திரு. அ. ரகுமான்கான் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை நேரம் இல்லை. அலுவல் ஆய்வு குழுவில் இடம் பெறவில்லை. உட்காருங்கள்.

திரு. அ ரகுமான்கான் : * * *

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1980 பிப்ரவரி 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரகுமான்கான் அவர்கள் என்னுடைய அனுமதி இல்லாமல் என்ன பேசியிருந்தாலும் அது குறித்து பத்திரிகைகளில் வெளியிடக் கூடாது. நடவடிக்கை குறிப்பிலிருந்தும் எடுத்து விட வேண்டும். ஒலி பெருக்கியில் பேசுகிற நேரத்திலேதான் எந்த உறுப்பினர் பேசினாலும் இடம் பெற வேண்டும். ஆகவே நான் சொல்வதற்கு முன்னாலே தானாகவே எழுந்து பேசுவது இந்த அவையின் விதிகளை மீறுவதாகும். அமைச்சரின் அறிக்கையோடு சரி. மற்றவைகளை அனுமதிக்க இயலாது.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, உங்களுடைய உத்தரவுதான் சபையைக் கட்டுப்படுத்தும். உங்களுடைய உத்தரவை தான் எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நேற்று நான் பேசியதாக சொல்லப்பட்ட விஷயங்களை சபையில் நீங்கள் நீக்க வேண்டும் என்று தெரிவித்த பிறகும் ''மாலை முரசு'', இன்னும் சில பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. ஆகவே தாங்களாகவே சூயோ-மோட்டாவாக நடவடிக்கை எடுத்து எச்சரிக்க வேண்டும். பத்திரிகைகளில் வெளி வந்தது தவறு, அவர் அப்படி பேசவில்லை என்று திரும்பவும் வெளியிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நிச்சயம் நடவடிக்கை எடுக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த பத்திரிகைகளில் வெளி வந்தது என்று எழுதிக் கொடுத்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதற்குத்தான் செயலாளர்கள் இருக்கிறார்களே. அவர்கள் எல்லாத் தகவல்களையும் உங்களுக்குத் தருவார்கள். நீங்கள் சொன்ன உத்தரவை மீறி அவைகள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன.....

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, நேற்று இங்கே மேஜையை உடைத்ததாக பத்திரிகைகளில் தகவல் வந்திருக்கின்றன. இங்கே மேஜை என்ன உடைந்தா இருக்கிறது?....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு தகுந்த தொழில் நிபுணர்களைக் கொண்டு வந்து பரிசோதனை செய்து பார்த்தால்தான் தெரியும் உடைந்திருக்கிறதா இல்லையா என்று....

திரு. சி. ஆறுமுகம்: வேண்டும் என்றே என் பெயரை திரித்துப் போட்டிருக்கிறார்கள். உங்களுக்கும் தெரியும்.

மாண்பமிகு பேரவைத் தலைவர்; திரு. ஆறுமுகத்தையும் திரித்துப் போட்டிருக்கிறார்களா? இங்கே எல்லோருக்கும் தெரியும், எனக்கும் தெரியும். உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என் அனுமதி இல்லாமல் எதையும் பேசக்கூடாது. பேசினாலும் நடவடிக்கைக் குறிப்பில் வராது என்று உத்தரவு இட்டிருக்கிறேன். அமருங்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பரவலாக மின்சாரம், டீசல் தட்டுப்பாடு இருக்கிறது. அதுபற்றி அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை..... (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே வெளிநடப்புச் செய்து அதை கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே உட்காருங்கள். திரு. லத்தீப்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு நேரம் இல்லை என்று சொல்கிறீர்கள். ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையைப் படிப்பதற்கு முன்னால், இந்த மாதிரி இன்னின்ன உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். நேரம் இல்லாத காரணத்தால் மறுக்கப்படுகிறது என்று....(மணியடிக்கப்பட்டது.)

(முற்பகல் 9.20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு நான் ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளவில்லை. அவர்கள் அறிக்கை வைத்தபிறகு இந்தப் பிரச்னையை இந்த உறுப்பினர்கள் எழுப்பினார்கள் என்று நான் சொல்வேன்.

2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

ஆ. சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.